[18th September 1958

Tanneries.

* 291 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of tanneries closed in 1957–58 districtwar, and

(*b*) the reasons therefor in each case?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] furnishing the information is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த ராஜ்யத்திலேயே வடாற்காடு ஜில்லாவில்தான் 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தோல் ஷாப்புகள் இருக்கின்றன. அப்பேற்பட்ட ஜில்லாவிலே 100 தோல் ஷாப்புகளுக்கு மேற்கொண்டு மூடப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும்போது இந்த ராஜ்யத்திலே 57 தோல் ஷாப்புகள்தான் மூடப்பட்டிருப்பதாக லிஸ்டிலே கண்டிருக்கிறது. இது சரியல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகவே, மீண்டும் இதைப் பரிசிலனை செய்து எத்தனை தோல் ஷாப்புகள் உண்மையிலே மூடப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி உண்மையான தகவலைக் கொடுக்க முடியுமா ?

MR. SPEAKER : THE HON. Member is not correct in saying " உண்மையான தகவல் கொடுக்கவேண்டும்". உண்மையான தகவல் கொடுக்கவேண்டும் என்று கேட்பதிலிருந்து கொடுக்கப்பட்டது உண்மையான தகவல் அல்ல என்ற அர்த்தம் கொடுக்கிறது. ஏதாவது தகவல்கள் இருந்தால் மினிஸ்டர் கையிலே கொடுங்கள். சட்டசபையிலே இந்த மாதிரி விவாதத்தைக் கிளப்பினால் எப்படிச் சொல்லமுடியும் ? I am afraid that it is not open to the hon. Member to say what the Minister says is wrong. If they have information, they may pass it on to the Minister. I do not want this question hour to be converted into one for debate as to which information is correct.

SRI A. A. RASHEED : From the statement placed on the table of the House, I see that most of the tanneries have closed for want of raw hides. What are the steps the Government have taken and intend to take to procure raw hides?

THE HON. SRI R. VENKATARAMAN : I request the hon. Member to read the statement. Most of the tanneries were closed because of loss in business.

SRI M. KALYANASUNDARAM : இது முக்கியமான தொழிலாக இருந்து வந்திருக்கிறது ; ஆயிரக்கணக்கான ஹரிஜன தொழிலாளிகளுக்கு வேலை கொடுத்து வந்த தொழில். அது இன்று பாதிக்கப்பட்டிருப்பதினால், இன்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் மூலமாக திறக்க நடவடிக்கை எடுப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தோல் பதனிடும் தொழில் மிகவும் சிக்கலானது. அதிலே லாப நஷ்டங்கள் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. சாதாரணமாக, பெரிய முதலாளிகளாலேயே இந்த நஷ்டத்தைச் சமாளிக்க முடியவில்லை என்ற நிலையில் இன்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ்னால் சமாளிக்கமுடியும் என்று நான் நினைக்கவில்லை. முக்கியமாக, தோலினுடைய விலை இந்திய நாட்டில் நிர்ணயம் செய்யப்படவில்லை. இங்கிலாந்தில் " ஆக்ஷனி "லே நிர்ணயிக்கப்படுகிறது. பெரிய அளவு தோல் பதனிடும் தொழிற்சாலை வைத்து

---

a Printed as Appendix II on pages 221–224 infra.

நடத்துகிறவர்களாலேயே சமாளிக்க முடியாமலிருக்கும்போது கூட்டுறவு இயக்கத்தினால் இதைச் சமாளிக்க முடியாது என்பது சர்க்காருடைய கருத்து.

SRI V. K. KOTHANDARAMAN: இந்த தோல் ஷாப்புகளில் தாழ்த்தப் பட்ட மக்கள் ஈடுபட்டு வேலை செய்கிறார்கள். தோல் ஷாப்புகள் மீண்டும் நடைபெற வேண்டுமென்பதற்காக, அவர்களுடைய லட்சக் கணக்கான ரூபாய் பெறு மானமுள்ள சொத்துக்களை அடமானம் காட்டியும் அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு சர்க்கார் முன்வரவில்லை. ஆகவே, உடனடியாக இது போன்ற பண உதவியையாவது சர்க்கார் செய்ய முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: இண்டஸ்ட்ரியல் அண்டர்டேகிங்சுக்கு எல்லாம் ஸ்டேட் எய்ட்டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்டின்படி ஓரளவு உதவி கொடுக்கப்படுகிறது. எந்த அளவு அவர்களுக்கு கொடுக்க முடியுமோ அதைப்பார்த்து கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேல் அதிகமாக பண உதவி செய்வதற்கு வழி இல்லை.

Committee on Co-operation.

*292 *Q*.—**SRI V. K. KOTHANDARAMAN**: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the major recommendations of the Committee on co-operation appointed under the Chairmanship of Sri T. M. Narayanaswami Pillai in 1955 which have so far been implemented and the details thereof; and

(*b*) the recommendations yet to be implemented and the reasons for the delay in implementing them?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) The report contains a summary of recommendations. The recommendations implemented so far are:—

41 to 58; 69 to 79; 82 to 99; 101 to 123; 124 to 132; 177 to 195; 198; 216 to 226; 227, 228, 235, 248 to 253, 254 to 259; 261; 263; 272 to 274; 311, 330; 332 to 334.

(*b*) The examination of other recommendations is not yet finished.

SRI V. K. KOTHANDARAMAN: மார்க்கெட்டிங் சொசைட்டிகளிலே எந்த எந்த உணவுப் பொருள்கள் பேரிலே பணம் கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN: தனியாக கேள்வி வேண்டும். சுமார் 300 சிபார்சுகள் இந்தக் கமிட்டி செய்திருக்கிறது. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் ஒரே சமயத்தில் பதில் கொடுக்க முடியாது. தனியாக கேள்வி போட்டால் பதில் கொடுக்கமுடியும்.

SRI M. KALYANASUNDARAM: அமைச்சர் அவர்கள், 300-க்கு மேற்பட்ட சிபார்சுகள் இருப்பதை, நம்பரைச் சேர்த்துக்கொண்டு பதில் சொல்வதனால், அவைகளைப் புரிந்துகொள்வது கஷ்டமாக இருக்கிறது. சிபார்சுகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதற்கு ஒரு அறிக்கை சபைமுன் வைக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: எல்லா சிபார்சுகளையும் பரிசீலனை செய்த பிறகு வைக்கலாம் என்பது சர்க்காருடைய யோசனை. இப்பொழுது "அட்மினிஸ்ட்ரேட்டிவ்" ஆக இருக்கக்கூடிய சிபார்சுகளை யெல்லாம் ஓரளவு அங்கீகாரம் செய்து விட்டோம். சட்டத்தைத் திருத்த